தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோக, அந்தப் பகுதியிலே தொழில் முனைவோர்கள் அதிகமாக இருப்பார்களென்று சொன்னால், நிச்சயமாக அந்த இடத்திலேயும் ஒரு தொழிற்பேட்டையை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. ரமேஷ் அவர்கள்.*

**திரு. எஸ்.கே. ரமேஷ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

*27—*

**தரம் உயர்த்துதல்**

***14036—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குளச்சல் தொகுதி, குளச்சல், திங்கள் நகர் போக்குவரத்துப் பணிமனைகளைப் புதுப்பித்து தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா ?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு 260 பணிமனைகளை மேம்படுத்துவதற்கு 3 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நிதியினைக் கொடுத்து போக்குவரத்துக் கழகத்தினுடைய பணிமனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. குளச்சல் அரசுப்*

போக்குவரத்துக் கழகப் பணிமனையில் 20 இலட்சம் மதிப்பிலான கான்கிரீட் தளங்கள் அமைக்கும் பணி நிறைவு பெற்றிருக்கின்றது. மீதம் இருக்கின்ற பணிகளுக்குண்டான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு டெண்டர் விடுவதற்குண்டான பணிகள் நடைபெற்று வருகின்றன. டெண்டர் முடிந்தவுடன் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியிலே புதிய தடத்தில் பல பேருந்துகளை இயக்க உத்தரவிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைச் சொல்லி, என் தொகுதியிலே குளச்சல் பணிமனையிலே 60 பேருந்துகளும், திங்கள்நகர் பணிமனையிலே 90 பேருந்துகளும் இயங்கி வருகின்றன. அடிப்படை வசதியில்லாமல் பின்தங்கிய நிலையிலே பணிமனைகள் உள்ளன என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: குளச்சல் பணிமனையிலே எனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.20 இலட்சம் கீழ் தளம் அமைக்க கொடுத்து இருக்கிறேன். மேலும் பழைய பழுதடைந்த பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் இயக்கவும், பேருந்துகள் சுத்தம் செய்யும் இயந்திரம் மற்றும் maintenance hi-tech lift, பணியாளர்களுக்கு நல்ல கழிப்பறை வசதியுடன் ஓய்வறை, போதிய mechanical staff நியமிப்பது, Bus body கட்டும் பணி தொடங்குவது, பேருந்துகளில் ஜி.பி.ஆர்.எஸ். சிஸ்டம் பொருத்துவது, பேருந்துகளில் modern ticket vending system பொருத்துவது, புதிய வழித்தடங்களில் பேருந்துகளை அதிகமாக இயக்குவது போன்று பணிமனையை தரம் உயர்த்தும் புதிய திட்டங்களை மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் நடைமுறைப்படுத்த முன்வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து போக்குவரத்துக் கழகத்தின் பணிமனைகளுக்கும் நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, அங்கு என்னென்ன அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும், முதற்கட்டமாகச் செய்ய வேண்டிய பணிகளுக்கெல்லாம் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் உத்தரவிட்டபடி அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவேண்டும் என்பதற்காக ரூ.3 கோடியே 16 இலட்சம் நிதி ஒதுக்கி, 260 பணிமனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சியிருக்கின்ற திட்டப் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு, அதற்குண்டான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, டெண்டர் விடும் பணிகள் நிறைவு பெற்று வருகின்றன.*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த குளச்சல் பணிமனையிலே 154 ஓட்டுநர்கள் தேவை. 154 நடத்துநர்கள் அந்தப் பணிமனையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நடத்துநர்கள் 162 பேர் முழுமையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தொழில்நுட்பப் பணியாளர்கள் உள்பட அத்தனை பேரும் குளச்சல் மற்றும் இங்கன்றுள்ள பணிமனைகளில் தேவையான அளவிற்கு இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை அரசின் வரலாற்றில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு என்று புதிய பேருந்துகள் வழங்கிய வரலாறுகள் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) கன்னியாகுமரி மாவட்டத்தில் பழுதடைந்த பேருந்துகளை மாற்றுவதற்கு உத்தரவிட்டு, படிப்படியாக புதிய பேருந்துகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அந்தப் புதிய பேருந்துகள் மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றன என்ற கருத்துகளை எடுத்துச் சொல்லி, திருநெல்வேலி மாவட்டத்தில் இயக்கப்பட்ட பேருந்துகள், பழுதையானதற்குப் பிறகு*

கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் செல்வது வாடிக்கையாக இருந்து வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட மக்கள்மீது அக்கறை கொண்டு, புதிய பேருந்துகள் கன்னியாகுமரி மாவட்டத்திலும் இயக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வைத்த கோரிக்கையையும் நிறைவேற்றி, அந்த வழித்தடங்களில் இப்போது புதிய பேருந்துகள் மக்களுக்குண்டான சேவைகளை வழங்கி வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்வையிட்டார்கள். ஆனால் ரூ.3.00 கோடி ஒதுக்கப்படுகிறது என்று சொல்கிறீர்கள். அந்த மூன்று கோடி ரூபாயிலே ஒரு கோடி ரூபாயை நிங்கள்நகர், குளச்சல் பணிமனை விரிவாக்கத்திற்கும், மேம்பாட்டிற்கும் தருவீர்களா? அந்தப் பணியை எப்போது மேற்கொள்வார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய இயக்கப் பேருந்துகள் எண்ணிக்கை 20,000 ஆக உயர்த்தப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு, ஆட்சிக் கட்டிலில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற ஒன்றரை ஆண்டுகளில் 20,500 இயக்கப் பேருந்துகளாக (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிக்கப்பட்ட இலக்கைவிட 500 பேருந்துகள் கூடுதலாக இயக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களுக்குண்டான அந்தச் சேவைகளை வழங்குவதற்கு, இதுவரை 1,352 புதிய வழித்தடங்களை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தங்களுடைய இருக்கரங்களால் தொடங்கி வைத்து, மக்களுக்கு அந்தப் பேருந்துகள் சேவை செய்து வருகின்றன. (மேசையைத் தட்டும்

ஒலி) ஒரு புதிய பணிமனை அமைக்கப்பட்டால்கூட அதற்குத் தேவையான முழு திட்ட மதிப்பீடு ரூபாய் ஒரு கோடிதான் வரும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பணிமனைக்குத் தேவையானவை என கேட்டது, கான்கிரீட் தளம் அமைக்கின்ற பணிகள். அதற்குண்டான திட்ட மதிப்பீடு ரூ.10 இலட்சம் மட்டுமே. திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுவிட்டது. டெண்டர் விடப்பட்ட பணிகள் முடிவுபெற்ற பின்பு, அந்தப் பணிகள் தொடங்கப்பட்டு நிறைவு பெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**28—**

**மீன் பண்ணை**

***5734—திரு. ந. நஞ்சப்பன்:**

*மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைக்கவும், அங்கு பிடிக்கப்படும் மீன்களை ஒகேனக்கல், பென்னாகரம் ஆகிய பகுதிகளில் விற்பனை செய்யவும் அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*ஒகேனக்கலில் பிடிக்கப்படும் மீன்கள் அவ்வூர் மக்களின் தேவைகளுக்கேற்ப உள்ளூரிலும், அருகிலுள்ள பூச்சியூர், நாகமரை, செம்மேடு ஆகிய ஊர்களிலும் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. ஒகேனக்கலில் ஏற்கெனவே அரசு மீன் பண்ணை உள்ளது. அதில் மீன்குஞ்சு வளர்ப்புப் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக அரசின்மூலம் மேலும் மீன் பண்ணை அமைக்க உத்தேசமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*